1990 மே 8]

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று தற்போது பழனியிலே நடந்து வருகிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. எங்களுடைய கட்சி அலுவலகத்திற்கு முன்னால் ஒரு வீட்டிலே அவர்கள் ஹாஸ்டலிலே தங்கி இருக்கிறார்கள், மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தக் கல்லூரியை வேறு ஊருக்கு மாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம்கூட போன மாதத்தில் இருந்தார்கள். அங்கே பயிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் விடுதி வசதிகளை தனித் தனியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? அதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கை என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியை சென்னைக்கே கொண்டு வர வேண்டுமென்று சென்ற ஆண்டு சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துகொள்வாரா என்பது என்னுடைய வினா. அவர் ஒத்துக்கொள்ள மாட்டார் என்று எண்ணுகிறேன். அதற்காக அரசு நடவடிக்கை எடுத்து அந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அறநிலையத் துறையோடு பேசி அங்கே உள்ள சத்திரத்தை விடுதியாகக் கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறோம். மேலும் அங்கே நிலத்தைக் கையகப்படுத்தி, கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் கல்லூரி 1985 லே துவக்கப்பட்டு அங்கே நில ஆர்ஜிதத்திற்கு எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளாத சூழ்நிலையில், இந்த ஆண்டு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காக அறநிலையத் துறையோடு பேசி ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும்
முதலீட்டில் பங்கும் அளித்தல்.

* 2026 **திரு. ஆர். அண்ணாநம்பி :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் முதலீட்டில் பங்கும் அளிக்கும் திட்டத்தை அரசு எப்போது நிறைவேற்றும்?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கேற்பது என்பது தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். மாநில அரசு, இத்திட்டத்தை சட்ட பூர்வமாக அமுல்படுத்த தற்போது வழி வகையில்லை, ஆயினும் மத்திய அரசு இது குறித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சட்டம் ஒன்று கொண்டு வர உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

தனியார் பஸ் தொழிலாளர் சங்கக் கோரிக்கை.

* 3533 திரு. செ. நூர்முகமது :

திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து தனியார் பஸ் தொழிலாளர் சங்கத்திடமிருந்து பணி பாதுகாப்பு, ஊதிய மாற்றம் மற்றும் சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்து 10—2—1989 அன்று கோரிக்கை மனு ஒன்று அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் இது குறித்துப் பதில் சொல்லுகின்றபோது இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வரவில்லை என்ற முறையில் பதிலளித்தார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி 10—2—1989 ல் தனியார் போக்குவரத்திலே பணி புரியக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்களிலே பணி புரியும் தொழிலாளர்களுக்குச் சம்பளம், சலுகைகள் எல்லாம் ஓரளவு நியாயமாகக் கிடைக்கும் நிலையில், தனியார் போக்குவரத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் மிகக் குறைந்த கூலியில், ஒரு சலுகைகூட இல்லாமல், நிரந்தரமற்ற முறையில், கொத்தடிமைகளைவிட கேவலமான நிலையில் வாழ்ந்து